# தமிழ்நாடு மின்ஊழியர் மத்தியஅமைப்பு

பதிவு எண் 158/சிபிடி - அங்கீகாரம் பெற்றது - இணைப்பு : EEFI & CITU
E-mail : coteecitu@gmail.com

CITU

27, மசூதி தெரு,
சேப்பாக்கம்,
சென்னை 600 005.
போன் 044 - 28548529

தலைவர்
தி. ஜெயசங்கர்

பொதுச் செயலாளர்
எஸ். இராஜேந்திரன்

பொருளாளர்
எம். வெங்கடேசன்

நாள் 27/07/2021

SECRETARIAT TAPAL SECTION 27 JUL 2021 CHENNAI-600 002

**துணைத் தலைவர்கள்**

ஆர். குருவேல்
டி. அறிவழகன்
பி.கே. சிவக்குமார்
கே. அம்பிகாபதி
டி. கோபாலகிருஷ்ணன்
எஸ். ரெங்கராஜன்
எஸ். இராமச்சந்திரன்
எம். சாலட்
என். பால்ராஜ்
எஸ். இராஜாராமன்
ஆர். செபாஸ்டியன்
பி. ஜீவா
வி. சந்திரன்

**துணைப் பொதுச் செயலாளர்கள்**

வி. இளங்கோ
கே. ரவிச்சந்திரன்
கே. அருள்செல்வன்
டி. பழனிவேல்

**செயலாளர்கள்**

ஆர். சிவராஜ்
எம். தனலட்சுமி
வீ. மதுசூதனன்
ஆர். ரவிக்குமார்
சி. ஜோதிமணி
எஸ். வண்ணமுத்து
எஸ். அப்பாதுரை
டி. ஸ்ரீதர்
எம். பீர்முகமதுஷா
எம். கோவிந்தராஜ்
கே. காங்கேயன்
எஸ். உமாநாத்
எம். தயாளன்
எஸ். அகஸ்டின்
ஏ. முருகானந்தம்
எஸ். ஜோதி

**1958-ம் ஆண்டின் தமிழ்நாடு தொழிற்தகராறு விதிகள்**
விதி 59(1)-ன் கீழ்
படிவம் "ஓ"
**(Form "O")**

**பொதுப் பயன் துறையில் வேலை நிறுத்தம் செய்வதற்காக தொழிற் சங்கத்தால் வழங்கப்படுகின்ற வேலை நிறுத்த அறிவிப்பு படிவம்**

- தொழிற்சங்கத்தின் பெயர் : தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு ( Central Organisation of Tamil Nadu Electricity Employees)

**வேலைநிறுத்த அறிக்கை தர தொழிலாளர்களால் அதிகாரம் பெற்றுள்ள ஏழு பிரதிநிதிகள்**

| | |
|---|---|
| 1. டி. ஜெயசங்கர் | தலைவர் |
| 2. எஸ். இராஜேந்திரன் | பொதுச் செயலாளர் |
| 3. எம். வெங்கடேசன் | பொருளாளர் |
| 4. கே. அருள்செல்வன் | து.பொ.செயலாளர் |
| 5. கே. ரவிச்சந்திரன் | து.பொ.செயலாளர் |
| 6. ஆர்.ரவிக்குமார் | செயலாளர் |
| 7. ஏ.முருகானந்தம் | செயலாளர் |

- முகவரி
27, மசூதி தெரு,
சேப்பாக்கம், சென்னை 5.

- வேலை நிறுத்த அறிவிப்பு தரும் நாள் : 27 ஜூலை 2021

பெறுநர் (நிர்வாகம்) : செயலாளர்
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும்
பகிர்மான கழகம்
144, அண்ணாசாலை
சென்னை-2.

ஐயா,

1947ம் ஆண்டு தொழிற் தகராறு சட்டப்பிரிவு 22(1)ன் படி வேலை நிறுத்த அறிவிப்பினை இதன் மூலம் தங்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறோம். சட்டப்பிரிவு 22(1)ன்படி (வேலை நிறுத்தம்) 2021 **ஆகஸ்ட் 10** அன்று வேலை நிறுத்தம் செய்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. **வேலை நிறுத்தம் 10.08.2021 காலை 6.00 மணிக்கு துவங்கி 11.08.2021 காலை 6.00 மணி** வரையில் நடைபெறும்.

1958ம் ஆண்டின் தமிழ்நாடு தொழிற்தகராறு விதிகளில் விதிஎண் 59-ன் கீழ் வேலை நிறுத்தத்திற்கு தேவைப்படுகின்ற அடிப்படையான விவரங்கள் அடங்கிய பட்டியல் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளது.

தங்களின் உண்மையுள்ள

<u>தொழிற் சங்கம் அளித்துள்ள அதிகாரத்தின்படி</u>
<u>தொழிற்சங்க ஏழு பிரதிநிதிகளின் கையொப்பங்கள்</u>

1. டி. ஜெயசங்கர் :
2. எஸ். இராஜேந்திரன் :
3. எம். வெங்கடேசன் :
4. கே. அருள்செல்வன் :
5. கே. ரவிச்சந்திரன் :
6. ஆர். ரவிக்குமார் :
7. எ. முருகானந்தம் :

பெறுநர்

1. செயலாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், 800, அண்ணாசாலை, சென்னை - 600 002.
2. செயலாளர், தொழிலாளர் துறை, தமிழ்நாடு அரசு, சென்னை 600 009.
3. தொழிலாளர் ஆணையர், தேனாம்பேட்டை, சென்னை 600 006.

இணைப்பு
வேலை நிறுத்ததிற்கு அடிப்படையான கோரிக்கை பட்டியல்.

## இணைப்பு

(1958-ம் ஆண்டு தொழிற் தகராறு விதிகளில் எண் 59-ன் கீழ்)

**(அ) தகராறுகளுக்கான கட்சிக் காரர்கள்** : 1) **தொழிலாளர் தரப்பு**
பொதுச் செயலாளர்
தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு
27,மசூதி தெரு, சேப்பாக்கம் ,
சென்னை- 600 005.

: 2) **நிர்வாகத் தரப்பு**
செயலாளர்
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும்
பகிர்மான கழகம்
144, அண்ணாசாலை
சென்னை-2.

**(ஆ) தொழிற் தகராறுகளின் தன்மை மற்றும் கோரிக்கைகள்** : மின்சார சட்ட திருத்த மசோதா 2021 கைவிட வேண்டும். மாநில மின்வாரியங்களை பொதுத்துறையாக நீடித்திட வேண்டும். விவசாயிகளின் நலன்களை பாதிக்கின்ற மூன்று வேளாண் சட்டங்களை திரும்ப பெற வேண்டும். மத்திய அரசு பின்பற்றும் கொள்கையினால் கட்டுக்கடங்காமல் விலைவாசி உயர்ந்துள்ளதை கட்டுப்படுத்திட வேண்டும்.

நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையில் மக்களின் வாழ்வாதரத்தை கவனத்தில் கொள்ளாமல் மின்சாரம், ரயில்வே, போக்குவரத்து, வங்கி, எல்.ஐ.சி உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயபடுத்தும் நடவடிக்கையை மத்திய அரசு வெகு வேகமாக செயல்பட்டு வருவதை கைவிட வேண்டும்

52,000க்கும் மேற்பட்ட காலிப் பணியிடங்களை நிரப்பாத காரணத்தால் மின் விபத்தும் உயிர்யிழப்பும் தினந்தோறும் ஏற்படுகிறது.

தொழிலாளர்கள், பொறியாளர்கள். அலுவலர்கள் என 72,000-த்திற்கும் மேற்பட்டவர்களும் 10,000- த்திற்கும் மேற்பட்ட ஒப்பந்த ஊழியர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

தொழிலாளர்களின் பணி நிலைகள், சம்பளம் தொழிலாளர் நலம் உள்ளிட்ட வாழ்நிலைகளை பாதுகாக்கவும், சம எண்ணிக்கையில் பதவி களை நிரப்பிட வேண்டும்.

அனைவருக்கும் ஓய்வூதியம் அளித்திடக் கோரியும், புதிய பென்ஷன் திட்டத்தை கைவிட்டு பழைய ஓய்வூதிய திட்டத்தையே செயல்படுத்திட வேண்டும்.

**(இ) பாதிக்கப்படுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் விவரம் :**

மின்சார வாரியத்தில் பணியாற்றும் 72,000-க்கும் மேற்பட்ட நிரந்தர தொழிலாளர் களும்,(பொறியாளர்கள், அதிகாரிகள் உட்பட) 10,000-க்கும் மேற்பட்ட ஒப்பந்த தொழிலா ளர்களும், 6,000-க்கும் மேற்பட்ட பகுதிநேர ஊழியர் களும் நேரிடையாக பாதிக்கிறார்கள். ஊழியர் பற்றாக்குறை காரணமாக 3 கோடியே 19 லட்சத்திற்கும் மேற்பட்ட மின் நுகர்வோர் களுக்கு தடையில்லா மின்சாரத்தை வழங்க இயலாத சூழல் ஏற்படுகிறது.

**(ஈ) தொழிற்தகராறுகளை தீர்ப்பதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகள் :**

தொழிற் சங்கங்கள் தொடர்ந்து போராடி வரும் நிலையில் அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும் இது தொடர்பாக மாண்புமிகு பிரதமர் மற்றும் மத்திய மின்துறை அமைச்சர் ஆகியோர்க்கு முறையாக மனுக்கள் அளித்தும், தீர்வு காணப்படவில்லை.

பலகட்ட பேச்சுவார்த்தையும் கோரிக்கைகளை முன் வைத்து தீர்வு காண்பதற்காக மாநிலம் தழுவிய உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம், பெருந்திரள் தர்ணா, காத்திருப்பு போராட்டம், என பல போராட்டங்கள் நடத்தியும் மத்திய அரசு முடிவெடுக்காத காரணத்தால் எங்களது தொழிற்சங்கம் நடத்திய இயக்கங்களுக்கு ஏதும் பலன் அளிக்காததால் இந்த வேலை நிறுத்தத்தை நோக்கி செல்ல வேண்டியுள்ளது.

**பொதுச் செயலாளர்**

## 1958-ம் ஆண்டின் தமிழ்நாடு தொழிற்தகராறு விதிகளில், விதி 59-ன் கீழ் தொழிற் சங்கம் நடத்தவுள்ள வேலை நிறுத்தத்திற்கு அடிப்படையான கோரிக்கைகள் அடங்கிய விபரப்பட்டியல்

★ மின்சார சட்ட திருத்த மசோதா 2021-ஐ கைவிடக் கோரியும், மின்துறையை பொதுத்துறையாக பாதுகாத்திடுக.

★ மின்சார தனியார் மயக் கொள்கை மற்றும் நிலையான தனியார்மய ஆதரவு விநியோக ஏல முறையை கைவிட வேண்டும்.

★ மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பொதுத்துறையான மின்சாரவாரியத்தில் தனியார் லாபம் பெறக்கூடிய வகையிலான உரிமங்களை முழுமையாக ரத்து செய்ய வேண்டும்.

★ மின்சார உற்பத்தி, தொடரமைப்பு மற்றும் விநியோகங்களை கேரளா மற்றும் இமாச்சல பிரதேச மின்வாரியங்களை போல் அனைத்து மாநில மின்வாரியங்களிலும் மறு சீரமைப்பு செய்திட வேண்டும்.

★ மின்துறையில் கட்டாய ஓய்வை நிறுத்திடவும், தற்போதுள்ள புதிய பென்ஷன் திட்டத்தை ரத்து செய்து, பழைய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப்படுத்திட வேண்டும்.

★ தெலுங்கானா மாநில மின்வாரியத்தில் அமுலில் உள்ளது போல சமவேலைக்கு சம ஊதியம் என்ற அடிப்படையில் மின்வாரியத்தில் பணியாற்றும் அனைத்து ஒப்பந்த பணியாளர்களையும் பணிநிரந்தரம் செய்திடக் கோரியும், மின்துறையில் காலவரை பணி (Fixed Term Employment) முறையை புகுத்துவதை தவிர்த்திட வேண்டும்.

★ மாநில மின்வாரியங்களில் அனைத்து அனுமதிக்கப்பட்ட காலிபணியிடங்கயையும் நிரந்தர பணியாளர்களை கொண்டு செயல்படுத்திட வேண்டும்.

★ மத்திய மாநில அரசுகளின் பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்பனை செய்வதை நிறுத்திடவும், தனியாருக்கு தாரை வார்ப்பதை கைவிட வேண்டும்.

★ மின்வாரியத்திற்கு சொந்தமான மின்உற்பத்தி நிலையங்களில் முழு வீச்சில் மின்உற்பத்தி நடைபெற வேண்டும். தனியாரிடம் அதிக விலைக்கு நீண்ட கால ஒப்பந்தத்தின் அடிப்படையில் மின்சாரத்தை கொள்முதல் செய்வதை கைவிட வேண்டும்.

**பொதுச் செயலாளர்**